சமாதானத்தின் இளவரசராக வந்திருக்கும் பஹாவுல்லா உலக ஒற்றுமை உலக அமைதி இவற்றை நிறுவிட அதிபெரும் போதனைகள், திட்டங்கள், சாதனங்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்துள்ளார். இறைவனின் அதிகாரத்துடனும் சக்தியுடனும் அவதரித்துள்ள பஹாவுல்லா மனித குலத்தைத் தம்பால் அழைக்கின்றார். உலக ஒற்றுமையின்றி உலகில் அமைதி நிலவிட வழியில்லை. இக்கால அவதார புருஷரை ஏற்காவிடில் உலக ஒற்றுமையை ஸ்தாபிக்க இயலாது. ஆண்டவன் நம் காலத்தில் மனித இனம் முழுவதுக்குமே அன்பு கூர்ந்து அருளிய இந்த அற்புத போதனைகளை திறந்த மனத்துடன் ஆய்வு செய்திட தங்களை நாங்கள் அன்புடன் அழைக்கின்றோம்.

''யாரொருவன் இன்று மனித இனத்தின் சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொள்கின்றானோ அவனே உண்மையான மனிதன்.''

- பஹாவுல்லா

''மனிதர்களே, எல்லா சமயத்தைச் சார்ந்தவர்களுடனும் நட்புடனும் சகோதர உணர்வுடனும் பழகிடுவீராக.''

- பஹாவுல்லா

''சகலத்தையும் அறிந்துள்ள மருத்துவர் தமது விரலினை மனித இனத்தின் நாடியின் மீது வைத்திருக்கின்றார். அவர் வியாதியினை அறிந்து கொண்டு சிகிச்சை பகர்கின்றார்.


- பஹாவுல்லா

மேலும் விபரம் அறிய உங்கள் பகுதியில் உள்ள பஹாய்களுடன் பின்வரும் முகவரியில் தொடர்பு

The Bahá'í Faith Tamil
www.bahai.org/national * 1-800-22UNITE
The Bahá'í House of Worship
100 Linden Ave., Wilmette, IL 60091
how@usbnc.org * www.bahaitemple.org
(847) 853-2300

அல்லது பின்வரும் முகவரிக்கு எழுதவும்:

**Bahá'í Community of Malaysia**
4, Lorong Titiwangsa 5, Setapak,
53200 Kuala Lumpur.




*Bahá'í House of Worship, Wilmette, U.S.A.*

# பஹாய் சமயம்

''உலகமே ஒரு நாடு மனித வர்க்கம் அதன் பிரஜைகள்''

- பஹாவுல்லா



**எல்லா சமயங்களின் நிறைவு**

அன்பும் அமைதியும் நிலவும் ஒரு சுபிட்சமான மகிழ்ச்சி பொங்கும் மனித சமுதாயம் மண்ணுலகில் தோன்றுவது குறித்து எல்லாக் காலங்களிலும் எல்லா மக்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். காலம் கனியும் போது ஓர் அவதார புருஷர் தோன்றுவார், அவர் உலகை ஒன்று படுத்தி மனிதர் மத்தியில் நீதியை, ஒற்றுமையை, சமரசத்தைத் தோற்றுவிப்பார் என்று எல்லா மதங்களிலும் கடவுள் மனிதனுக்கு வாக்குறுதியளித்திருக்கிறார்.

இத்தீர்க்கதரிசனத்திற்குப் பொருந்த 143 ஆண்டுகட்கு முன் பாரசீகம் எனும் ஈரான் தேசத்தில் பஹாய் சமயம் எனும் புதிய தெய்வீக வெளிப்பாடு உலகில் தோன்றியது. மனித குலத்திற்கு வாக்குறுதியளிக்கப்பட்ட அவதார புருஷர் தாமே என்று பஹாவுல்லா உலகுக்குப் பிரகடனப் படுத்தினர். இதன்வழி உலகம் ஒன்று, மனித இனம் ஒன்று, மதங்கள் எல்லாம் ஒன்று என்ற சித்தாந்தத்தை மனிதர் சிந்தனையில் தோற்றுவிக்கக்கூடிய ஒருமாபெரும் ஆன்மீகப் புரட்சியை பஹாவுல்லா ஆரம்பித்தார்.



பஹாவுல்லாவின் தூதுப்பணியின் நோக்கம் மனித வர்க்கத்தை ஒன்றுபடுத்தி மனிதர்களின் எல்லா விவகாரங்களையும் நிர்வகிக்கக்கூடிய ஓர் உலக அமைப்பை தோற்றுவிப்பதாகும். இந்த இலட்சியத்தை நிறைவேற்ற பஹாவுல்லா கடல் போன்ற போதனைகளை வெளியிட்டுள்ளார். அவரது போதனை இதற்கு முன் வந்த கிருஷ்ணர், புத்தர், இயேசு ஆகியோரை அங்கீகரிப்பதுடன் அவர்களது போதனைகளையும் உறுதிப்படுத்துகிறது.


உண்மையில் கடவுளின் சமயங்கள் யாவும் ஒரே நூலின் பல அத்தியாயங்கள் போன்றவையே. இவை கடவுள் மனிதனுக்குப் பாடும் அன்பு கீதங்களாகும். அடிப்படையில் இவை ஒன்றுதான். இவை காலத்திற்கும் மனிதரது புரிந்து கொள்ளும் ஆற்றலுக்கும் ஏற்றாற் போல் பகுதி பகுதியாக வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு பெயர்களில் உலகில் தோன்றின என்று பஹாய் சமயம் கூறுகிறது. இதற்கு முன் வந்த எல்லா தேவதூதர்களின் நோக்கங்களும் பஹாவுல்லாவின் வருகையின் மூலம் பூர்த்தியாகின்றன.



## கொள்கைகள்

மனித இனம் எனும் பூங்காவில் ஓர் ஆன்மீக வசந்த காலத்தை அறிமுகப்படுத்திய பஹாவுல்லா அங்கு வளர்ந்து செழிக்க வேண்டிய கொள்கை மலர்களையும் வரையறுத்துள்ளார். அவை:

1. மனித இனம் ஒன்று.
2. எல்லா மதங்களின் அடிப்படையும் ஒன்று.
3. சமயம் ஒற்றுமைக்குக் காரணமாயிருத்தல்.
4. எல்லா இன, மத, நிற, ஜாதி வேறுபாடுகளையும் துவேஷங்களையும் களைதல்.
5. சமயமும் விஞ்ஞானமும் ஒத்து இயங்குதல்.
6. சுயேச்சையாக உண்மையை ஆய்வு செய்தல்.
7. ஆண் பெண் சமத்துவம்.
8. பரவலாக நிலவிவரும் பொருளாதார அரசியல் பிரச்னைக்கு ஆன்மீக வழியில் தீர்வு காணுதல்.
9. கட்டாயக் கல்வி வழி யாவருக்கும் கல்வி கற்க வாய்ப்பளித்தல்.
10. தாய்மொழியுடன் உலக பொதுமொழி ஒன்றையும் கற்றல்.
11. உலகில் சமாதானத்தை நிலைநிறுத்தப் பாடுபடுதல்.
12. அனைத்துலகப் பிரச்னைகளைத் தீர்க்க சர்வதேச நியாய சபை ஒன்றை நிறுவுதல்.




## ஒரே மனித இனம்

பஹாய் போதனைகளிலெல்லாம் சாரமாகவும், மையமாகவும் திகழ்வது 'மனித குலம் ஒன்று' எனும் போதனையாகும். 'நீங்கள் எல்லாம் ஒரு மரத்தின் கனிகள்; ஒரு கடலின் அலைகள்; ஒரு தோட்டத்தின் மலர்கள்' என்றும் 'உலகமே ஒரு நாடு; மனித குலம் அதன் பிரஜைகள்' என்றும் பஹாவுல்லா மொழிவதின் வழி மனிதனை ஓர் உலகளாவிய மனோ சிந்தனைக்கு, ஒரு சர்வதேச மனப் போக்கிற்கு அழைத்துச் செல்கிறார். ஒருமைப்பாடு நிலவும் இந்த அரங்கில் எல்லா வேற்றுமைகளும் அகற்றப்படுகின்றன; உண்மை அன்பு, சேவை அடிப்படையில் அமைந்த நிலையான ஐக்கியம் உருவாகின்றது.

## பஹாவுல்லாவின் உலக அமைப்பு

மனித குலம் ஒன்று என்று கொள்கையளவில் கூறுவதோடு மட்டும் நின்று விடாமல் அதை நிதர்சன உண்மையாக்கப் பஹாவுல்லா உலகளாவிய நிர்வாக அமைப்பினையும் அபரிமிதமான போதனைகளையும் அருளிச் சென்றுள்ளார். ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கக்கூடிய உள்ளூர் ஆன்மீக சபைகளும் தேசிய ஆன்மீக சபைகளும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கக்கூடிய உலக நீதிமன்றம் எனும் தலைமை ஸ்தாபனமும் பஹாய் நிர்வாக அமைப்பின் முக்கிய கூறுகளாகும். 1963-ம் ஆண்டின் போது இந்த உலக நீதிமன்றம் முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதன் நிழலின் கீழ் உலக மக்கள் அனைவரும் ஒன்று கூடுவர் என்று பஹாவுல்லா மனிதகுலத்திற்கு வாக்குறுதியளித்துள்ளார்.



## வரலாற்றுப் பாதையில்

இத்தகைய புரட்சிமிக்கப் பஹாய் கருத்துகள் 1844ம் ஆண்டு ஈரான் நாட்டில் தோன்றின. அங்கே பாப் (வாசல்) எனும் இறைத்தூதர் பஹாவுல்லா எனும் உலகத் தீர்க்கதரிசி ஈரானில் அவதரிக்கப் போவதாக யாவருக்கும் பிரகடனம் செய்தார். இதன்படி 1863-ம் ஆண்டு பஹாவுல்லா (கடவுளின் ஜோதி) பாப் அவர்கள் கூறிச் சென்ற அவதார புருஷர் தாமே என்று மாமன்னர்களுக்கும் சமயத் தலைவர்களுக்கும் பாமர மக்களுக்கும் பகிரங்கமாக பிரகடனப்படுத்தினர். இவர் பள்ளிச் சென்று பாடம் கற்கவில்லை. ஆயினும் இறையருட் தூண்டுதலினால் அளவிறந்த புனித வசனங்களை வெளிப்படுத்தினர். பஹாவுல்லா 50,000த்திற்கும் மேற்பட்ட நிருபங்களை அருளி மனிதன் வழிதவறிப் போகாமல் இருப்பதற்குரிய மார்க்கத்தைக் காட்டியுள்ளார். இவரது விளக்கங்களும் வியாக்கியனங்களும் ஆழக் கற்ற சமய அறிஞர்களையும் பிரமிக்கச் செய்கின்றன.

இருளினில் உழன்ற மக்கள் அவரை எதிர்த்தனர்; சிறைப்படுத்தினர்; சித்திரவதை செய்து துன்புறுத்தினர். நாற்பதாண்டுகளுக்கு மேல் அவர் சிறைக் கைதியாக இன்னலுற்றார். ஆனால் இறுதி வரை தாம் கடவுளின் இக்காலத்திற்கான அவதார புருஷர் என்று கூறுவதிலிருந்து பின் வாங்கவில்லை. தமது உலகப்பணி முற்றுப் பெற்றவுடன் 1892-ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

பஹாவுல்லாவிற்குப் பிறகு அவரது மூத்தப் புதல்வரான அப்துல் பஹா சமயத்தை வழி நடத்திச் சென்றார். அப்துல் பஹாவின் மறைவிற்குப் பிறகு அவரது பேரன் ஷோகி எபெண்டி சமயத்தின் பாதுகாவலராக அரும்சேவையாற்றி 1957-ம் ஆண்டு மறைந்தார்.

## இன்றைய நிலை

145 ஆண்டு கால இடைவெளியில் பஹாய்கள் ஓர் உலக சமுதாயத்தையே உருவாக்கியுள்ளனர். இன்று 360 நாடுகளிலும் பிரதேசங்களிலும் தீவுகளிலும் உள்ள 2112-க்கும் மேற்பட்ட இனத்தினர் பஹாய் சமயத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். பஹாய் நூல்கள் 782-க்கும் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாட்டுப் பொருளாதார சமூக மன்றத்திற்கு ஆலோசனை வழங்கும் மிக உயரிய அந்தஸ்து 1970-ம் ஆண்டில் பஹாய் சர்வதேச சமூகத்திற்கு வழங்கப்பட்டது.

## ஏன் பஹாய் சமயம்?

சமூக, பொருளாதார, அரசியல், சமயத் துறைகளில் இணக்கமும் ஒற்றுமையும் இல்லாத காரணத்தால் இன்று மனித இனத்தின் பாதுகாப்பிற்கும் நல்வாழ்வுக்கும் பெரும் மிரட்டல் ஏற்பட்டுள்ளது. போர், இனவெறி, சமய வெறி, பட்டினி, வன்செயல், அநீதி ஆகியன எங்கும் ஆட்சி புரிகின்றன. இன்றுள்ள தலைவர்களாலும் அவர்கள் அளிக்கும் வழிமுறைகளாலும் கொள்கைகளாலும் மனிதன் எதிர்நோக்கும் பிரச்னைகளைத் தீர்க்க முடியவில்லை. மேன்மேலும் நிலைமைகள் மோசமடைந்தே வருகின்றன. மனித இனம் விரக்தியின் விளிம்பிற்குச் சென்றுவிட்டதென்று கூறுவோமாகில் அது மிகையாகாது.